**செய்தி வெளியீடு எண்:538** **நாள்: 16.08.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.8.2017) கடலூரில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரை**

அன்பின் உருவம், ஆற்றலின் இருப்பிடம், இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

இந்த மகத்தான விழாவிற்கு சிறப்புரை ஆற்றிய
கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு.**அருண்மொழிதேவன்** அவர்களே!
தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர்
திரு. **பி.தனபால்** அவர்களே!
முன்னிலை வகிக்கின்ற மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்
திரு.**எம்.சி.சம்பத்** அவர்களே!
வரவேற்பு உரையாற்றிய
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் அவர்களே,
நன்றியுரையாற்ற உள்ள கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு.டி.பி. ராஜேஷ்அவர்களே!**
சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. **சந்திரகாசி** அவர்களே!
காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர்
திரு. **முருகுமாறன்** அவர்களே!

சிதம்பரம் சட்டமன்ற உறுப்பினர்

திரு.**பாண்டியன்** அவர்களே!

விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர்

திரு.**கலைச்செல்வன்** அவர்களே!

பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர்

திருமதி. **சத்யா பன்னீர்செல்வம்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,

திரு. **திண்டுக்கல் சீனிவாசன்** அவர்களே!

திரு. **செங்கோட்டையன்** அவர்களே!

திரு. **செல்லூர் ராஜு** அவர்களே!

திரு. **தங்கமணி** அவர்களே!

திரு.**வேலுமணி** அவர்களே!

திரு.**ஜெயக்குமார்** அவர்களே!

திரு. **சி.வி.சண்முகம்** அவர்களே!

திரு. **கே.பி.அன்பழகன்** அவர்களே!

டாக்டர் **வி.சரோஜா** அவர்களே!

திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே!

திரு. **ஆர்.காமராஜ்** அவர்களே!

திரு. **ஓ.எஸ். மணியன்** அவர்களே!

திரு. **இரா.துரைக்கண்ணு** அவர்களே!

திரு. **கடம்பூர் ராஜு** அவர்களே!

திரு.**ஆர்.பி. உதயகுமார்** அவர்களே!

திரு. **வெல்லமண்டி என்.நடராஜன்** அவர்களே!

திரு. **கே.சி.வீரமணி** அவர்களே!

திரு. **கே.டி.ராஜேந்திர பாலாஜி** அவர்களே!

திரு. **பா.பெஞ்சமின்** அவர்களே!

டாக்டர் **நிலோபர் கபில்** அவர்களே!

திரு. **எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்களே!

திரு. **எம்.மணிகண்டன்** அவர்களே!

திருமதி. **வி.எம்.ராஜலட்சுமி** அவர்களே!

திரு. **ஜி.பாஸ்கரன்** அவர்களே!

திரு.**சேவூர் எஸ்.இராமச்சந்திரன்** அவர்களே!

திருமதி. **எஸ்.வளர்மதி** அவர்களே!

திரு. **பி. பாலகிருஷ்ணா ரெட்டி** அவர்களே!

அரசு தலைமைக் கொறடா

திரு. **இராஜேந்திரன்** அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி

திரு. **என். தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திருமதி

**பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர்

திரு. **பி.கே.வைரமுத்து** அவர்களே!

நன்றியுரை ஆற்ற உள்ள

கடலூர் மாவட்ட வருவாய் அலுவலர்

திரு. **திருமதி கோ.விஜயா** அவர்களே!

தலைமைக் கழக நிர்வாகிகளே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கழகத்தின் விழுதுகளாக இருக்கின்ற

ரத்தத்தின் ரத்தங்களான

கழக உடன்பிறப்புக்களே !

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்

அவர்களின் தீவிர ரசிகர்களே !

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே,

இளைஞர்களே! மாணவ மாணவிகளே!
நலத்திட்டப் பயனாளிகளே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“சோழநாடு சோறுடைத்து
பாண்டிய நாடு முத்துடைத்து
சேரநாடு தந்தம் உடைத்து
தொண்டை நாடு சான்றோர் உடைத்து”
என்பது முதுமொழி.

தொண்டை நாடாகிய கடலூரில்
சான்றோர் பெருமக்கள் பலர் அவதரித்தார்கள்.

சைவத்தின் மூலம் தமிழையும், ஆன்மீகத்தையும்
தமிழ் மண்ணில் வேரூன்ற வைத்த
**அப்பர் அடிகள்** அவதரித்த மண் இது.

**“அருட்பெரும் ஜோதி! தனிப்பெரும் கருணை!”** என்றும், **“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்”** என்றும் புதிய சிந்தனையை மக்கள் மனதில் ஊன்றிய புரட்சித் துறவி வள்ளலார் வாழ்ந்து, ஜோதியில் கலந்த வடலூரை தன்னகத்தே கொண்டது
இந்தக் கடலூர் மாவட்டம்

1920–ல் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக
இருந்த சுப்பராயலு ரெட்டியார்
கடலூர் மண்ணின் மைந்தர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்த கடலூர்,

சென்னை மாகாணத்தின் தலைநகராகவே விளங்கியிருக்கிறது.

பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், உடையார்கள்
விஜயநகர ஆட்சியாளர்கள், செஞ்சி நாயக்கர்கள்,
பிஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர்கள், முகலாயர்
என பலர் ஆண்டிருந்தாலும்,
தனக்கே உரிய கலை, கலாச்சாரம், பண்பாடு எதையும் யாரிடமும் எப்போதும்
இழக்காமல், இன்றைக்கும் தனித்தன்மையோடு திகழும் பூமி தான்
இந்தக் கடலூர்.

கடலூரில் அறமும் ஆன்மிகமும் கைகோர்த்து தழைத்தன.

108 வைணவத் தலங்களுள் ஒன்றான
திருவந்திபுரம் தேவநாதசுவாமி கோயில்,
பூலோக கைலாசம் என்று அழைக்கப்படும்
சிதம்பரம் தில்லை நடராஜர் கோயில்,
ஸ்ரீமுஷ்ணம் பூவராகவசுவாமி கோயில்,
முருகப்பெருமான் அரூபமாக காட்சியளிக்கும்
விருதாச்சலம் கொளஞ்சியப்பர் கோயில்,
என பல தெய்வத் திருத்தலங்களாலும்,

பிச்சாவரம் அலையாத்தி காடுகள்,
நீண்ட நெடிய வெள்ளிக் கடற்கரை போன்ற
பல சுற்றுலாத் தலங்களாலும்,

கொள்ளிடம், தென்பெண்ணை,
மணிமுத்தாறு, கெடிலம் போன்ற ஆறுகளாலும், பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி,
வீராணம் ஏரி, வெலிங்டன் ஏரி போன்ற
நீர் நிலைகளாலும் சூழப்பட்டது கடலூர்.

ஒரு பக்கம் நீல நிறக் கடலாலும்,
ஒரு பக்கம் பச்சை நிற வயல்களாலும்,
இன்னொரு பக்கம் தொழிற்சாலைகளாலும்
பரந்து விரிந்தது நம்முடைய கடலூர் மாவட்டம்.

பணம் ஈட்ட பல வழிகள் உண்டு.
ஆனால், உணவு உற்பத்தி செய்ய
ஒரே வழிதான் இருக்கிறது.
அதுதான் விவசாயம் என்பதை உணர்ந்தவர்கள்
இந்தக் கடலூரை ஆண்ட சோழர்கள்.

முதலாம் பராந்தகச் சோழன்,
வீராணம் ஏரியை உருவாக்கி வேளாண்மையை வளப்படுத்தி, கடலூர் மாவட்டத்தை
பசுமை பூமியாக மாற்றினார்.
மாண்புமிகு அம்மா அவர்கள்
புதிய வீராணம் திட்டத்தின் மூலம்,
சென்னை மாநகர மக்களின்
தாகத்தை தணித்தார்கள்.

தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் கடலூர் ஒரு புண்ணிய பூமி என்றே கூறலாம்.
கடலூரில் பிறக்கவும் வாழவும், நீங்கள் பாக்கியம் செய்திருக்கிறீர்கள்.

நீங்கள் வசிக்கிற, வரலாற்று சிறப்புகள் கொண்ட
கடலூரில், புரட்சித்தலைவர் பொன்மனச்செம்மல்
டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை
நடத்துவதில் ஒரு பொருத்தம் இருக்கிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தின் கற்பக விருட்சம்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

அரசியல் பிரவேசம் கடலூரில் தான் தொடங்கியது.
1982–ஆம் ஆண்டு கடலூரில் நடைபெற்ற
மாநாட்டில் தான் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மாண்புமிகு
புரட்சித்தலைவி அம்மா அவர்களை முதன்முதலில்
அரசியலுக்கு அறிமுகப்படுத்தினார்கள்.
அதன்பிறகு, கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமித்தார்கள்.

எனவே, இந்த கடலூர் மாவட்டத்தில் இருந்து
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய அரசியல்
பயணத்தை தொடங்கினார்கள்.

கழக நிர்வாகத்தையும், ஆட்சிப்பொறுப்பையும் இலட்சோப இலட்ச
கழகத்தொண்டர்களையும்
தனி ஒருவராக தன் தோளில் சுமந்துகொண்டிருந்த
மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்
கழகப்பொறுப்புகளை புரட்சித்தலைவி அம்மா
அவர்களுக்கு பகிர்ந்து அளித்தது இந்தக் கடலூர் மண்ணில்தான்.

எனவே, கழகத்தின் வரலாற்றில்
கடலூர் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.
கழக சரித்திரத்தில் கடலூர் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய
ஊர்.

இத்தனை சிறப்புகளைக் கொண்ட இப்புனித மண்ணில் நடைபெறும் இந்த
விழாவில் கலந்து கொள்வதை நானும் பெருமையாகக் கருதுகிறேன்.

கடலூர் இளைஞர்களும் பெண்களும் வீரமும் விசுவாசமும் மிக்கவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

கடலூர் இளைஞர்களின் சக்தியும் தியாகமும் கடலூருக்கு இயற்கை இடர்பாடு ஏற்படும் ஒவ்வொரு தருணத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

என்னைப் பொருத்தவரை, வீரமும் விவேகமும் கொண்ட இளைஞர்களை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிம்பங்களாகவே நான் பார்க்கிறேன்.

ஓர் இளைஞன் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

ஒரு நடிகரும் ஒரு தலைவரும் எப்படி இருக்க வேண்டும் என்று இலக்கணமாக வாழ்ந்தவரும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து மந்திரம், மக்கள் மனதில் பதிய காரணமாக இருந்தது அவரது திரையிசைப் பாடல்கள்தான்.

தன் மேன்மையான கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்ல சரியான வழி,
திரைப்படப் பாடல்கள்தான் என்பதை
புரிந்து கொண்ட, மக்கள்திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள்,
சமூக விழிப்புணர்வு பாடல்களை
தன் படங்களில்இடம் பெறச்செய்து,
இளைஞர்களை ஊக்கப்படுத்தினார்கள்.
புரட்சித்தலைவர் அவர்களின் பாடல்கள் மூலம்
கவர்ந்து ஈர்க்கப்பட்ட இளைஞர்கள்
புரட்சித்தலைவரின் தீவிர ரசிகர்களாக மாறி
சமுதாயத் தொண்டில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

புரட்சித்தலைவர் திரைவழியாகவும், பாடல்கள் மூலமாகவும் கூறிய
அறிவுரைகளின்படி தங்களையும்
சமுதாயத்தையும் மாற்றி ஒரு புதிய தமிழ்நாட்டை
உருவாக்கினார்கள். அதன் விளைவுதான்,
1977–ல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாட்டின்
முதலமைச்சராக, தன்னிகரற்ற
அரசியல் தலைவராக அவதாரம் எடுத்தார்.

அன்றைய இளைஞர்களுக்கு மட்டுமல்ல;
இன்றைய இளைஞர்களுக்கும்,
நாளைய இளைஞர்களுக்கும் கூட
புரட்சித்தலைவர் அவர்கள்
புத்துணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய சக்தியாக விளங்குகிறார்.

> **"நாம பாடுற பாட்டும், ஆடுற கூத்தும்**
> **படிப்பினை தந்தாகணும்!"**

என்று புரட்சித்தலைவர் 'நல்ல நேரம்' படத்தில் பாடியதைப்போல .. அவருடைய
பாடல்கள்
பாடப்புத்தகத்தைப்போல, பெரியோரின் அனுபவத்தைப்போல,
இளைஞர்களுக்கு
படிப்பினையைத் தருகின்றன.

இளைஞர்களுக்காக புரட்சித்தலைவர் அவர்கள்
அறிவுறுத்திய ஒரு சில தத்துவங்களை இந்த விழாவின் மூலம் உங்களோடு
பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**‘‘தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது’’**

என்றார் நபிகள் நாயகம்.

தான் தாயை எப்படி மதித்தாரோ, அப்படியே தன்னைப் பின்பற்றும் இளைஞர்களும் தாயை மதிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்.. தனது படங்களின் பெயர்களில்கூட தாய்க்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

**‘தாய்க்குப் பின் தாரம்’**
**‘தாயைக் காத்த தனயன்’**
**‘தாய் சொல்லைத் தட்டாதே’**
**‘தாயின் மடியில்’**
**‘தெய்வத்தாய்’**

என்று தாயைப் போற்றும் படங்களில் நடித்தார்.

**‘அடிமைப்பெண்’** படத்தில்
**‘‘தாயில்லாமல் நானில்லை’’** என்ற பாடலும்
**‘‘பாசம்’’** படத்தில்

**‘‘எல்லாம் எனக்குள் இருந்தாலும்,**
**என்னைத் தனக்குள் வைத்திருக்கும்**
**அன்னை மனமே என் கோயில்**
**அவளே என்றும் என் தெய்வம்’’**

என்ற பாடலும்,

**‘‘வெற்றி மீது வெற்றி வந்து**
**என்னைச் சேரும்—அதை வாங்கித்தந்த**
**பெருமையெல்லாம் உன்னைச் சேரும்’’**

என்ற பாடலும்;
புரட்சித்தலைவர் தாய் மீது வைத்திருந்த
பாசத்தை பிரதிபலிக்கும்.
தன்னைப் போல, தன்னை பின்பற்றும் இளைஞர்களும்
தாயைப் போற்ற வேண்டுமென்று நினைத்துத்தான்
புரட்சித்தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட
காலத்தால் அழியாத பாடல்களை தமிழுக்கும்
தமிழ்நாட்டு மக்களுக்கும் தந்தார்கள்.

தமிழ்நாட்டுக் குழந்தைகளின் மேல் புரட்சித்தலைவர் அவர்களுக்கு அதிக
அக்கறை இருந்ததை
அவருடைய பாடல்கள் மூலம் நாம் தெரிந்து
கொள்ளலாம்.

**“சின்னப் பயலே, சின்னப் பயலே, சேதி கேளடா!”**

என்ற பாடலை நாம் மறக்க முடியுமா ? அந்தப்பாடலில்

**“ஆளும் வளரணும் அறிவும் வளரணும்**
**அதுதான்டா வளர்ச்சி”**

என்று குழந்தைகளின் உடல் வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் படம்
பிடித்துக் காட்டுவார்.

இளைஞர்கள்தான் இந்தியாவின் வருங்காலத் தூண்கள் என்பதால்
**இளைஞர்களை நம்பித்தான்**
**நாடும் வீடும் இருக்கிறது** என்பதை

**“நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி**
**இந்த நாடே இருக்குது தம்பி**

என்று புரட்சித்தலைவர் அவர்கள் தன் பாடல்
வரிகளில் மிக தெளிவாக எடுத்துரைப்பார்.

**“நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே!**
**நம் நாடு என்ற தோட்டத்திலே**
**நாளை மலரும் முல்லைகளே!”**

என்று பாடினார்.

**“சிரித்து வாழ வேண்டும்– பிறர்**
**சிரிக்க வாழ்ந்திடாதே!”**

என்ற சிறந்த கருத்தை இளைஞர்களின் மனதில்
விதையாக தெளித்தார் புரட்சித்தலைவர் அவர்கள்.

**“கருணை இருந்தால் வள்ளலாகலாம்;**
**கடமை இருந்தால் வீரனாகலாம்;**
**பொறுமை இருந்தால் மனிதனாகலாம் – இந்த**
**மூன்றும் இருந்தால் தலைவனாகலாம்”**

என்று தலைவன் ஆவதற்கான தகுதிகளை
புரட்சித்தலைவர் பட்டியல் இடுவார்.
கருணை, கடமை, பொறுமை
இந்த மூன்றும் இயல்பாகவே இருந்ததால்தான்
எம்.ஜி.ராமச்சந்திரன் என்கிற ஒரு சாமானியர்
புரட்சி நடிகராகவும், புரட்சித்தலைவராகவும்
உயர்ந்து முதலமைச்சராக உயர முடிந்தது.

**“இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்**
**இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்”**

என்று இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டுமென்று
புரட்சித்தலைவர் அவர்கள் ஆசைப்பட்டாரோ!
அப்படியே தானும் வாழ்ந்து காட்டினார்.

இளைஞர்களை வழிநடத்த
வாராது வந்த மாமணியாய்

தவம் கிடந்து பெற்ற தவப்புதல்வராய்
தமிழ்நாட்டுக்குக் கிடைத்த தன்னலமற்ற
மாபெரும் தலைவர் புரட்சித்தலைவர் அவர்கள்.
புரட்சித்தலைவர் அவர்களுக்குப் பிறகு
தொண்டர்களை வெற்றிப்பாதையில் வழி நடத்தியவர்
புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.
புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்குப் பிறகு
மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில்
தமிழகத்தை வழிநடத்தும் **ஒரே தகுதி**
**அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்**
**கழக உடன்பிறப்புகளுக்கு மட்டும்தான் இருக்கிறது.**
**காரணம்... இந்த கழகத்தில்தான் உண்மையும் உழைப்பும் விசுவாசமும்**
**தியாகமும் கொண்ட இளைஞர் சக்தி இருக்கிறது.**
அதிலும் குறிப்பாக கடலூர் இளைஞர்கள் ஜப்பானியர்களைப் போன்றவர்கள்.
இயற்கை இடர்பாடுகள் எத்தனை
வந்தாலும் அதனை எதிர்கொண்டு,
அதிலிருந்து மீண்டெழுந்து வெற்றி காண்பவர்கள் கடலூர் இளைஞர்கள்.

கடலூரின் பாதுகாப்பிலும், முன்னேற்றத்திலும்
மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அக்கறையும்
ஈடுபாடும் இருந்தது.

தமிழ்நாட்டுக்கு பட்ஜெட் போடும்போது கடலூருக்கு
அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
அம்மா வழியைத்தான் அம்மாவின் வழியில் வரும் நாங்களும்
பின்பற்றுகிறோம்.
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு,
இங்கு நடைபெறும்
கடல் தொழிலுக்கும் கழனித் தொழிலுக்கும்

அரிய பல திட்டங்களைத் தந்தது.

பசிநீக்கும் வடலூர் வள்ளலாரின் சத்திய தருமசாலையைப் போல, இருள் நீக்கும் நெய்வேலி அனல் மின் நிலையம் கடலூருக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

அப்போதைய மத்திய அரசு,
நெய்வேலி அனல் மின் நிலையத்தின் பங்குகளைத் தனியாருக்குத் தாரை வார்க்க முடிவு செய்தபோது
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதனைத் தடுத்து நிறுத்தி 3.56 சதவீதப் பங்குகளைத்
தமிழ்நாடு அரசே வாங்க வழிவகை செய்தார்கள்.
அதன்மூலம், தனியாருக்கு செல்ல இருந்த
நெய்வேலி அனல் மின் நிலையத்தைக் காத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்.

கடலூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கடலூர் துறைமுகத்தை
மேம்படுத்தி, அனைத்து பருவகாலத்திலும்
கப்பல்களை கையாளக்கூடிய
துறைமுகமாக மாற்றுவதற்கு மத்திய அரசின்
சாகர்மாலா திட்டத்தின் கீழ், தமிழக அரசின்
பங்களிப்புடன் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் நீர்த்தடுப்பிகளை நீட்டிப்பு செய்தல்,
அணுகு கால்வாய் முழுவதும் 9 மீட்டர் ஆழத்திற்கு தூர்வாருதல் மற்றும் உள்நாட்டுச் சரக்குகளுக்கான
தோணித்துறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை
115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
இத்திட்டத்திற்கு கடலோர விதிமுறை மண்டலம்

மற்றும் சுற்றுச்சூழல் அனுமதிகள் பெறுவதற்கான
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
**உரிய அனுமதிகள் பெற்றபின், துறைமுக மேம்பாட்டுப்பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள்**
**துவக்கப்படும்.**

கடலூர் துறைமுக மேம்பாட்டுத்திட்டத்தின் மூலம்
கடலூர் துறைமுகத்திற்குள் நேரடியாக கப்பல்கள்
வந்து சரக்கு கையாள இயலும்.
இந்தத் திட்டத்தின் பலனாக, மீனவர்களின் படகுகள்
தங்குதடையின்றி சென்றுவரவும்,
மீன்பிடி வாழ்வாதாரம் மேம்படவும் வழிவகை செய்யும்.

இந்தத் திட்டத்தின் மூலம் கடலூர் மாவட்டத்தின்
சமூக பொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன்,
சுமார் 500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்க
வழிவகை செய்யும்.

நகராட்சி நிர்வாகம், பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சி மற்றும்
ஊராட்சித்துறை உள்ளிட்ட
பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 50 கோடி ரூபாய் மதிப்பில் 9 புதிய
திட்டப்பணிகளுக்கு
இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அதைப்போல, தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம்
சார்பில் 260 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்டம் உட்பட பல்வேறு
துறைகளின் சார்பாக 312 கோடியே 13 இலட்சம்
மதிப்பீட்டில் 23 நிறைவடைந்த திட்டப் பணிகளையும்
திறந்து வைக்கப்படுகிறது.

மேலும், 41 ஆயிரத்து, 608 பயனாளிகளுக்கு, 212.63 கோடி மதிப்பிலான பயன்கள் வழங்கப்பட உள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டம் கடலோர மாவட்டம் என்பதால்
இங்கே தென்றலும் வீசும், புயலும் வீசும்
இங்குள்ள மக்கள் தென்றலை அனுபவிப்பது போலவே
புயலையும் எதிர்கொள்ளும் வீரம் மிக்கவர்களாக
இருக்கிறார்கள்.

தன்னைவிட சக்தி கொண்டவன் இந்த நாட்டில்
யாரும் இல்லை. தன்னால்தான் நாட்டில்
எல்லாமும் நடக்கிறது. அனைவரும் தனக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று
கர்வமும், ஆணவமும் மிக்கவர்கள் இயற்கைக்கு முன்பு ஒன்றுமில்லாமல்
ஆகிவிடுகிறார்கள் என்பதை உலகுக்கு இந்தக் கடலூர் அடிக்கடி நிரூபித்துக் காட்டியிருக்கிறது.

“**கூடி வாழ்ந்தால் கோடி நன்மை**” என்பார்கள்.
ஒற்றுமையின் வலிமையை உணர்ந்தால்தான் தெரியும்.
யார் பெரியவர் யார் சிறியவர் என்ற பேதமில்லாமல்,
ஒருவரோடு ஒருவராக இணைந்து இணக்கமாக வாழ்வது என்பது நமக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கும் நல்லது. நாட்டை விடுங்கள்; ஒற்றுமை என்பது ஒரு காட்டுக்கு எப்படி நன்மையாக இருந்தது என்பதை ஒரு கதையின் மூலம் கூறினால் நன்றாகப் புரியும்.

ஒரு காட்டில் இருக்கும் பெரிய ஆலமரம், தன் நிழலில் ஒதுங்கும் விலங்குகளிடமும் பறவைகளிடமும் மனிதர்களிடமும் எப்போதும் தன் பெருமைகளையே கூறிக்கொண்டிருக்கும்.

ஒருநாள், ஒரு முனிவர், அந்த மரத்திற்கு அடியில்
ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார்.
வழக்கம்போல, அந்த மரம் முனிவரிடமும் தன் பெருமையைக் கூறியது.
“என் நிழலில்தான் சிங்கம், புலி, கரடி, யானை எல்லாம் படுத்து
களைப்பாறுகின்றன; ஏன், இந்த வழியாகப் போகும் மன்னர்கள் கூட
என்னடியில் அமர்ந்து ஓய்வெடுத்துதான் செல்கிறார்கள்;
இந்தக் காட்டில் வாழும் அத்தனை உயிரினங்களும் என் ஒருவனுக்குத்தான்
கட்டுப்பட்டவை.
எனவே, நான்தான் இந்தக் காட்டிற்குப் பெரியவன்” என்று அந்த மரம்
முனிவரிடம் கூறியது.

மரம் கூறுவதைக் கேட்டு முனிவர் சிரித்தபடியே, ‘‘மரமே, நீ இப்படி
எல்லோரிடமும்
உன் பெருமையைப் பேசிக்கொண்டே இருந்தால் உனக்கு நண்பர்களே
இல்லாமல் போய் விடுவார்கள்; உனக்கு ஓர் ஆபத்து என்றால் யாரும் உதவ
முன்வர மாட்டார்கள்; எனவே, நீ அடக்கமாக இருக்க வேண்டும்; காற்று உன்
நண்பனாக இருக்கும் வரை உனக்கு ஆபத்து ஒன்றுமில்லை’’ என்றார்.

முனிவர் சொல்வதைக் கேட்டு, மரத்திற்கு கடும் கோபம் வந்தது.
‘‘முனிவரே, காற்று என் நண்பன் தான்; ஆனால், அவன் என்னை விட
உயர்ந்தவன் அல்ல; காற்றையும் எதிர்க்கும் வல்லமை எனக்கு உண்டு’
என்றது.

‘‘மரமே, நீ கூறியதை நான் அப்படியே காற்றிடம் போய் சொல்லட்டுமா ? என்று
முனிவர் கேட்டார்.

‘‘எனக்கென்ன பயம் இருக்கிறது ?; போய்ச் சொல் !. இன்று இரவே என்னோடு
மோதிப் பார்க்கட்டும் !
யார் வலிமையானவர் என்பதைக் காட்டுகிறேன்’’ என்று மரம் சவால் விட்டது.

‘‘சரி, இன்று இரவே காற்றை அனுப்புகிறேன்; உன்னைப் புயலாக வந்து அவன் சந்திப்பான்’’ என்றபடி முனிவர் புறப்பட்டு விட்டார்.

முனிவர் சென்ற பிறகு, மரத்திற்கு பயம் வந்தது.
இன்று இரவு, காற்று புயலாக வந்து தன்னைத் தாக்கப் போவது உறுதி. அந்தப் புயலில் இருந்து, தப்பிக்க வேண்டும் என்றால், தன்னுடைய கிளைகள், கனிகள் அனைத்தையும் உதிர்த்துவிட்டு நின்றால், காற்றால் தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்று மரம் நினைத்து, கிளைகளையும் கனிகளையும் உதிர்த்துவிட்டு நெட்டநெடு மரமாக நின்றது.

இரவு வந்தது.
காற்று, மரத்தை நெருங்கி வந்து,
“ஏ! நண்பனே! நான் புயலாக வந்தால் எதையெல்லாம் நீ இழப்பாயோ, அதையெல்லாம் நான் வருவதற்கு முன்பாகவே நீ இழந்து விட்டதால் எனக்கு வேலை ஒன்றும் இல்லாமல் செய்து விட்டாய்; உன் ஆணவத்தால் உன்னால் உருவான காய், கனி, இலை, கிளைகளை நீயே இழந்து விட்டாய்; உன் நிழலுக்காக வரும் காட்டு விலங்குகள்கூட இனிமேல் உன்னிடம் வராது; உன் கர்வத்தால் நீ தனிமைப்பட்டுவிட்டாய்; இனியாவது, உன் ஆணவத்தைக் கைவிட்டு, எனக்கு நல்ல நண்பனாக மாறு; அதுதான் இந்தக் காட்டுக்கு நல்லது; நாம் அனைவரும் சேர்ந்தால்தான், தென்றலாக வீச முடியும்; நமக்குள் பகை ஏற்பட்டால், உனக்கு மட்டுமல்ல, இந்தக் காட்டுக்கே கேடு விளையும்’’ என்று மரத்திற்கு காற்று அறிவுரை கூறியது.
மரம், தன் தவறை உணர்ந்தது.
காற்றும் மரமும் பழையபடி நண்பர்களாகின.

இனி அந்தக் காட்டில் புயலுக்கு வேலையே இல்லை. தென்றல்தான் வீசப் போகிறது.

இதைக் கழக உடன்பிறப்புகள் மனதில் நிறுத்தி,
ஒற்றுமையுடன் செயலாற்றி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் விருப்பத்தையும்
மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணங்களையும்
நிறைவேற்ற இந்த இனிய நாளில் உறுதியேற்போம்.

இன்ன்றக்கு புரட்சித்தலைவ அம்மா அவர்கள் என்னென்ன கனவு கண்டார்களோ அை9தயெல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி வருகின்றது. விவசாயிகள் இந்த நாட்டிற்கு தூணாக விளங்குகின்றார்கள். விவசாயம் செழிச்க வேண்டும், விவசாயிக்களுக்கு தேவையான நன்மைகள் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனையோடு இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அம்மா வழியில் வந்த அம்மாவினுடைய அரசு விவசாயிகள் நன்மை கிடைக்கவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களெயெல்லாம் தூர்வார வேண்டும் என்பதற்காக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை அறிவித்தது. இது விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். இந்த திட்டத்தின் மூலம் முதல் கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி 1519 ஏரிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தில் முழுக்க முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு, அரசும் சேர்ந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகளுக்கு இலவசமாக அரசு தருகின்றது. இந்த வண்டல் மண்ணை விவசாயிகள் அள்ளி தங்கள் நிலங்களுக்கு எருவாக இடுகின்றபோது, அந்த விவசாயிகள் பயிரிடுகின்றபொழுது, அதில் அதிகமான விளைச்சல் பெற்று, அதிகமான லாபம் பெறக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது. இதுவரைக்கும் எந்த அரசும் செய்ய முடியாத திட்டம். இன்றைக்கு விவசாயிகளுடைய மேம்பாட்டிற்காக, விவசாயிகளுடைய வளர்ச்சிக்காக,

விவசாயிகளுடைய வளர்ச்சி மேலும், மேலும் சிறப்படைய, விளைச்சல் அதிகரிக்க, வருமானம் இரட்டிப்பாக பெறுவதற்காக, இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டம் சிறப்பான திட்டம் என்று விவசாயிகள் மத்தியில் இருந்து கோரிக்கைகள் வந்ததன் விளைவாக, மேலும் இந்த திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கி, தமிழகத்தில் 2065 ஏரிகள் இந்தத் திட்டத்தின் மூலமாக எடுத்துக் கொள்ள இருக்கின்றது. இந்தத் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலமாக, ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் மூலமாக விவசாயிகள் வண்டல்மண் அள்ளுகிறார்கள். வண்டல்மண் அள்ளுகின்ற பொழுது, தூர்வாருகின்ற பொழுது, அந்தக் குளம் ஆழமாகின்றது. ஆகவே, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் முழுவதும் அந்த ஏரி, குளங்களில் சேமிக்கப்படுகிறது. வறட்சியான காலத்தில் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயத்திற்கு தேவையான நீர், குடிதண்ணீருக்கு தேவையான நீர் இந்தத் திட்டத்தின் மூலமாக கிடைக்கிறது. இந்த அற்புதமான திட்டத்தால் விவசாயிகளும் பயன்பெறுகிறார்கள், பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் பாதுகாக்கின்ற திட்டம் குடிமராமத்து திட்டம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளுக்கு ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கிறது. நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும். ஆங்காங்கே இருக்கும் ஓடைகளின், நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு, பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் ஆங்காங்கே சேமிக்கப்பட்டு, நிலத்தடி நீர் உயரவேண்டும் என்பதற்காக மூன்றாண்டுகளிலே தடுப்பணை கட்டுவதற்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. முதல்கட்டமாக, அம்மாவினுடைய அரசு 350 கோடி ரூபாய் இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக, ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டு,

நீர்நிலைகளை உயர்த்தி, மக்களுக்கு தேவையான நீரை சேமிக்கக்கூடிய வகையில் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல நீர்வள, நிலவள திட்டத்தின் மூலமாக இன்றைக்கு, தமிழகம் முழுவதும் 220 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்காக 787 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே, இத்திட்டத்தின் மூலமாக வாய்க்கால்கள், ஏரிகள், மதகுகள் புதுப்பிக்கப்படும். இதன் மூலமாக, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்துக் கொள்ளப்படும். இப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை விவசாயிகளுக்கு வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அரசு இந்த அரசு என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. கடலூர் மாவட்டம், விவசாயம் நிறைந்த மாவட்டம், விவசாயத்தை நம்பி வாழ்கின்ற அதிகமான விவசாயிகள் இருக்கின்ற மாவட்டம், விவசாயிகள், விவசாய தொழில்கள் அதிகமாக இருக்கின்ற பகுதி இந்த கடலூர் மாவட்டம். ஆகவே, கடலூர் மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை அம்மா வாரிவாரி கொடுத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல. கடந்த 140 ஆண்டுகாலமாக இல்லாத கடுமையான வறட்சி, பருவமழை பொய்த்து விட்டது. அப்படி இருந்தும்கூட, தமிழகத்தில் விலைவாசி ஏறாமல் அம்மாவினுடைய அரசு பார்த்துக் கொண்டது. இப்படிப்பட்ட கடுமையான வறட்சியிலும் ஆங்காங்கே குடிநீர் பிரச்சினை ஏற்படாமல் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கிய அரசு இந்த அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக 2244 கோடி ரூபாய் அளித்து, அந்தத் திட்டம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அதே போல, கல்விக்கு முன்னுரிமை. ஒரு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி, கல்வியை மையமாக தான் வைத்திருக்கின்றது. எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு மாநிலத்திலும் கல்வி அறிவு அதிகமாக இருக்கின்றது என்று பார்த்தால், அங்கே வளம் பெறும், சமூக பொருளதார மேம்பாடு அடையும். அங்கே அமைதி, அன்பு, திறமை இருக்கும். அத்தனையும் வேண்டுமென்றால் கல்வி வேண்டும். அப்படிப்பட்ட கல்வியை அம்மா அவர்கள் தந்தார்கள். அம்மா, கல்வியில் ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு கல்வியில் அதிக நிதி ஒதுக்கீடு செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஒரு நாடு அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னால், ஒரு மாநிலம் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொன்னால், கல்வி அறிவு தேவை. அதற்கு அம்மா எடுத்த நடவடிக்கை ஏராளம். அம்மா கல்வியிலே புரட்சி ஏற்படுத்தியதன் விளைவு, இன்றைக்கு நம்முடைய மாணவர்களுடைய தரம் உயர்ந்திருக்கின்றது, உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே 2011 ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பொழுது, அப்பொழுது 100க்கு 21 சதவீதம் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு இதயதெயவம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியில் எடுத்த நடவடிக்கை, கல்வியில் ஏராளமான திட்டங்களை நம்முடைய மாணவர்களுக்கு கொடுத்ததன் விளைவாக இன்றைக்கு கல்வியினுடைய சதவீதம், உயர்கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை 44.3 சதவீதமாக உயர்ந்து இன்றைக்கு தமிழகம் கல்வியிலே ஒரு உயர்ந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்திய அளவில் பார்க்கும் பொழுது 24.5 தான். தமிழ்நாட்டில் தான் உயர்கல்வி படிப்பவர்களுடைய

எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, அம்மா அவர்கள் ஆங்காங்கே கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, , ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதாரண குடும்பத்திலே இருக்கின்ற மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்கவேண்டும், பட்டப் படிப்பு படிக்கவேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய 6 ஆண்டு கால ஆட்சியிலே ஏராளமான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழகத்திலே நிறுவினார்கள். ஆறாண்டு கால ஆட்சியிலே 4 பொறியியல் கல்லூரிகள், 16 பாலிடெக்னிக் கல்லூரிகள், 21 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 24 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள், என்று மொத்தம் 65 கல்லூரிகள் துவக்கப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு குறைந்த கட்டணத்திலே உயர்கல்வியை நம்முடைய மாணவச் செல்வங்கள் அம்மாவினுடைய ஆட்சியில் தான் கல்வி கற்றார்கள். எனவே தான் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் ஆறாண்டு காலத்தில் இத்தனை கல்லூரிகளை உருவாக்கி சரித்திம் கிடையாது. அம்மா அவர்கள் தான் செய்தார்கள். இன்றைக்கு வசதி படைத்தவர்கள் எல்லாம் தனியார் கல்லூரிகளில் படித்து, பட்டம் பெற்று வேலைக்கு சென்று விடுகிறார்கள். ஆனால் ஏழை குடும்பத்திலே பிறந்த தாழ்த்தப்பட்ட மாணவ மாணவிகள் எல்லாம் தனியார் கல்லூரிக்குச் சென்று படிக்க முடியாத சூழ்நிலை. இப்படிப்பட்ட மாணவர்களும் சமமாக இருக்கவேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் அரசுக் கல்லூரியை உருவாக்கி, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிப்பதற்கு வித்திட்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் நடக்கும் அம்மாவினுடைய அரசு இந்த ஆண்டு 8 அரசு கலை மற்று. அறிவியல் கல்லூரிகளை கொடுத்திருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, உங்களுடைய மாவட்டத்திலும் அம்மாவினுடைய அரசு ஒரு அரசு மற்றும் அறிவியில் கல்லூரியை உங்களுடைய பகுதிக்கு கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். காட்டுமன்னார்

கோயில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தந்திருக்கின்றது, இந்த ஆண்டே துவக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஏழை மாணவன் படிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை கொடுத்திருக்கின்றோம். அதேபோல, 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 3 பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரிகள் என்று மொத்தம் 11 கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியிலே மீனவர்களை விடுதலை செய்த அரசு அம்மாவினுடைய அரசு. சிலபேர் பேசுகின்றார்கள். அடிக்கடிடெல்லிக் சென்று பாரதப் பிரதமரை சந்திக்கிறார்கள், என்ன சாதித்தார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். நாங்கள் அடிக்கடி பிரதமரை சந்தித்ததன் விளைவு தான் மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அடிக்கடிடெல்லி சென்று பாரதப் பிரதரையும், மத்திய அமைச்சர்களையும் சந்திப்பது தமிழ்நாட்டினுடைய நன்மைக்குத் தான் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

அதே போல, நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் ஏழை, எளியோர்கள் வீடுகட்டுவதற்காக 2,10,000 ரூபாய் மானியமாக அரசின் சார்பாக கொடுக்க இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நெசவாளர்களுக்கு மின்சார சலுகை, விசைத்தறி நெசவாளர்களுக்கு விசைத்தறி தொழில் செய்பவர்களுக்கு மானியத்திலே மின்சாரம், இப்படி பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டப் பேரவை உறுப்பினர்களும் இங்கே கோரிக்களை

தந்தார்கள். இக்கோரிக்கைகளின் அடிப்படையிலே இங்கே புதிய அறிவிப்புகள் சிலவற்றை வெளியிடுகிறேன்.

**அறிவிப்புகள்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த காலத்திலே கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில், ஆதலூர் குமாரமங்கல்த்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ரூ.400 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படும் என மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பு செய்ததன் தொடர்ச்சியாக, விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. திட்ட அறிக்கை பரிசீலித்து, ஒப்புதல் வழங்கி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தரைமட்ட தடுப்பணை ஒன்று புதிதாக கட்டப்படும்.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் நகரம், ------------ நதியில் தடுப்பணை ஒன்று புதிதாக கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், தெப்பக்குடி வட்டம், திட்டக்குடியில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். இத்தடுப்பணைகளால் நிலத்தடி நீர் மட்டம் உயரும்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம் பிச்சாவரத்தில் முப்பணாறு வடிகாலின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்கும் ஒரு சுவர் அமைக்கப்பமும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய மாவட்ட அமைச்சர், உங்களுடைய மாவட்டத்தில் இருக்கிற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்இந்தப் பகுதியிலே கடல்நீர் விளைநிலங்களில் புகுகின்றது, அதை தடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதை

நிறைவேற்றுகின்ற விதமாக, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே வல்லம் படுகையில் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் புவனகிரி வட்டம், ஆதிவடகாநல்லூர் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்க சுவர் அமைப்பது குறித்து ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட அறிக்கை தயார் செய்யப்படும், திட்ட அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தி. இதன் மூலமாக 57 கிராமங்கள் பாதுகாக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல அம்மாவினுடைய அரசு, காட்டுமன்னார் கோயிலில் அரசு மற்றும் அறிவியல் கல்லூரி நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர், அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று புதிதாக காட்டுமன்னார்கோயிலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தோம். இந்த கல்லூரிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி என பெயர் சூட்டப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடலூர் மாவட்டத்தில் வெள்ளம் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக கடலூர், பண்ருட்டி, சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் ஆகிய பகுதியிலுள்ள பெரிய ஓடைகள், வடிகால், வாய்க்கால்களில் நீர் தடுக்கும் திறனை அதிகரித்தல் மற்றும் பழைய கொள்ளிடம் ஆற்றில் வெள்ள பாதிப்புகளை தடுத்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகிய நிரந்தர வெள்ள தடுப்பு பணிகள் 140 கோடி ரூபாய் மதிப்பில் செய்வதற்கு அந்தப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, நான் கடலூருக்கு வருகின்றபோதே உங்களுடைய அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எங்களுக்கு நிலையான குடிநீர் செய்துதர

வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளை ஏற்று, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் வழியோர குடியிருப்புகளுக்கென நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக்குடிநீர் திட்டம் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பேரூராட்சிகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு ஏற்கனவே கொள்ளிடம் ஆற்றை நீர் ஆதரமாகக் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தில் தற்போது 140 ஆண்டுகாலம் இல்லாத கடும் வறட்சியால் நீர் ஆதாரம் குறைந்து விட்டதால், கடலூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை முழுமையாக நிறைவேற்றும் வகையில், நிரந்தர தீர்வு காணும் பொருட்டு மாற்று ஏற்பாடாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு கடலூர் மாவட்டத்திலுள்ள திட்டக்குடி, பென்னாடம், மங்கலம்பேட்டை, வடலூர், குறிஞ்சிப்பாடி, கன்னிகொண்டான் பேரூராட்சிகள் மற்றும் விருத்தாசலம், நல்லூர் மற்றும் மங்கலூர் ஊராட்சி முதலிய ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறுகிற வகையில் சுமார் 1000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாள் ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டத்தின் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள பேரூராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு நிலையான குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு சிலர் இதை அரசு நிகழ்ச்சியாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே அம்மா அவர்கள்

ஆசைப்பட்டார்கள். ஏழை, எளிய ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். அதன் ஒப்பற்ற முதலமைச்சராக இருந்தவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தான் இருக்கின்ற வரை தன் நாட்டு மக்களுக்காக உழைத்து, மறைந்த மாபெரும் மனிதர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவருடைய நினைவை கூருகின்ற வகையிலே இந்த நாட்டு மக்கள் அவரது பெருமைகளை தெரிந்து கொள்ளும் வகையிலே அரசின் சார்பாக ஒரு ஆண்டு முழுமையான பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை கொண்டாட வேண்டுமென்று அம்மா எடுத்த முடிவின்படி அம்மாவின் அரசு இன்று நடத்திக் கொண்டிருக்கிறது. நாங்கள் நடத்த வில்லை அம்மா ஆணையிட்டார்கள். புரட்சித்தலைவர் அவர்களுடைய பிறந்தநாள் ஆனாலும் சரி, அம்மாவின் பிறந்தநாள் ஆனாலும் சரி ஏழை எளியவர்களுக்கு நலத் திட்டங்களை வழங்கும் ஒரே கட்சி இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

நான் கொள்கை பரப்பு செயலாளராக இருந்த போது திரு.சுரத்தூர் ராஜேந்திரன் அவர்கள் கடலூர் மாவட்ட செயலாளராக இருந்தார். அப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டுமென்று கடலூர் மாவட்டத்திற்கு வர வேண்டும் என்று அழைத்தார். மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியோடு அந்த விழாவில் கலந்து கொண்டு கடலூர் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை கடலூர் மாவட்ட மக்களுக்காக நான் வழங்கினேன்.

நான் 1974ல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தேன். அதற்கு பிறகு கிளை கழகச் செயலாளராக முதன்முதலில் கட்சிப் பணியை துவக்கினேன். பின்னர்

ஒன்றியத் தலைவராகவும், மாவட்டம் கழகத் தலைவராகவும், பதவி வகித்தேன். சாதாரண கிளை கழகத்திலிருந்து உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறேன்.

நாங்கள் ஒன்றும் கொல்லைப்புற வழியாக வரவில்லை. உழைத்து இந்த பதவிக்கு வந்திருக்கிறோம். உழைப்பை நம்பியவர்கள் எதற்கும் அஞ்ச மாட்டார்கள். சிலர் கொல்லைப்புறத்தின் வழியாக வந்து கட்சியையும் ஆட்சியையும் பிடித்து விட வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இது ஒருபோதும் நடக்காது. புரட்சித் தலைவர் மற்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் உருவாக்கி வளர்த்து வந்த இயக்கம் ஒன்றரை கோடி தொண்டர்கள் இருக்கும் வரை இந்த கட்சியையோ ஆட்சியையோ அசைக்க முடியாது.

இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தான் ஒரு சாதாரண மனிதன் கூட தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆக முடியும் என்ற சரித்திரத்தை இந்த இயக்கம் படைத்திருக்கிறது. இந்தியாவிலே எந்த இயக்கத்திலும் உயர்ந்த பதவிக்கு வர முடியாது. ஆனால் இந்த இயக்கத்திலே உழைப்பு மற்றும் விசுவாசம் இருந்தால் சாதாரண ஒரு தொண்டன் கூட உயர்ந்த நிலைக்கு வர முடியும் என்பதற்கு நானே ஒரு உதாரணம் என்பதை சுட்டிக் காட்டி விரும்புகிறேன்.

நான் ஒரு தொண்டாக இருந்து இன்றைக்கு உயர்ந்து நின்று கோட்டை கொத்தளத்திலே ஒரு விவசாயி கொடியேற்றி விவசாயிக்கு பெருமை சேர்த்த அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

இந்த சீர்மிகு விழாவிற்காக ஒற்றுமையோடு உழைத்த
கழகப் பிரதிநிதிகளுக்கும்
கழகத் தொண்டர்களுக்கும்,
பொதுமக்களுக்கும், பலவகையிலும்
ஒத்துழைப்பு நல்கிய அரசு அலுவலர்களுக்கும்,
காவல்துறையினருக்கும் பாராட்டுகளையும்,
வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றும் நமதே! இன்றும் நமதே! நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்!

*****

**வெளியீடு : — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**